முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1516

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.11.2023,** வியாழக்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
   பிரம்ம ஞான சூட்சுமம் அறிந்த ராஜனே
   வரம்பல பெற்று கலியுக மக்களை
   வள்ளலாக வாழுகின்ற காலம் அவர்களெல்லாம் அழியாமை பெற
2. அழியாமை பெற அற்புதம் நடத்துகின்ற குருராஜனே
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   மொழிகுவேன் ஞான அறிவுரை ஆசி
   முழுமைபட சோபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 07 ம் நாள், 23.11.2023, வியாழக்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு சக்தி கூட்டி
   தவசிகளெல்லம் அரங்கன் சேவையை மெச்சி
   என்னாளும் தொடர்ந்து அரங்கன் வழித் தொடர
   இனிதே ஆறுமுகன் யான் அருள் செய்து வருகின்றேன்
4. வருகவே அரங்கனோடு யானிருந்து
   வழிமொழிந்து அரங்கன் தர்மத்தை
   பேருலகமெல்லாம் பரப்பி
   புண்ணியலோகமாக்கும் மகா சேவையை செய்து வருகின்றேன்
5. வருகவே அரங்கனை உலகோர்
   வழிமொழிந்து தொடர்ந்து வந்தால் போதும்
   போதும் தர்ம குணம் பெருகுவதோடு தரணியில் எங்கும்
   தர்மசக்தி வலுவாய் நிற்க
6. நிற்கவே உலகமெங்கும் தர்மவான்கள் ஆட்சி
   உயர்வான ஞான ஆட்சியாக
   வருங்காலம் அமைந்து சடுதி இனிதே
   வையகத்தில் அற்புதம் நிகழ வகைசெய்வேன்

7. செய்யவே அரங்கனால் இந்த அற்புதத்தை
   சித்திமிகு தொண்டர்களை கொண்டு இனிதே
   ஐயன் முருகன் யான் அகிலத்தில் நடத்துவேன்
   அற்புதம்பட அரங்கன் குடில் தொடர்பு உலகோர்க்கு பெரும் நன்மை தரும்
8. தருகவே பிரணவக்குடில் நோக்கி
   தரணியோர் தொடர்ந்து வந்தால்
   முருகப்பெருமான் யான் வெளிப்பட்டு
   முழுமையான ஞான ஆட்சித் தருவேன்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–